# அறிவித்தல் இல. R/2025/03

## வடக்கு மாகாண பாடசாலைகளில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலப் பாடங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - I(அ) தரத்திற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் NP/01/01/08/01/01ம் இலக்க *2024.11.27*ம் திகதியில் முன்னளிப்புச் செய்யப்பட்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சின் NP/3/1/4/Gra.Tea/2023ம் இலக்க *2024.11.20*ம் திகதிய கடிதம், வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் 2025.01.24ம் திகதிய அனுமதி மற்றும் 2021.01.26ம் திகதியில் 2021/01 இலக்க ஆளுநர் குறிப்பாணை மூலம் வெளியிடப்பட்டுள்ள அதிகாரக்கையளிப்பு ஆகியவற்றிற்கமைவாக அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டு, நிரப்பப்படாதுள்ள வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - I(அ) தரத்திற்குரிய வெற்றிடங்களுக்குப் (**இணைப்பு - *01*** இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) பட்டதாரிகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்காக, தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இணைப்பு - *02*** இல் காட்டப்பட்டவாறாக குறிப்பிட்ட பாடங்களுக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிப்பதற்கு அறிவுறுத்தப்படுகின்றனர். **இணைப்பு - *01*** இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்குரிய வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **2025.07.18** ஆகும்.

## 2. ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சேவை நிபந்தனைகள்

*2.1* **1885/38**ம் இலக்க **2014.10.23**ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களிலும் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **1817/30**ம் இலக்க **2013.07.03**ம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கு உட்பட்டு, தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கை ஆசிரிய சேவையின் 3ம் வகுப்பு I(அ) தரத்திற்கு நியமிக்கப்படுவர்.

*2.2* இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இவ் ஆட்சேர்ப்பின் மூலம் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள், நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

*2.3* இச் சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால், இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் உட்பட்டவர்களாவர்.

*2.4* நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

*2.5* நியமனப் பாடசாலை தொடர்பில் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் விண்ணப்பதாரர் கட்டுப்படுதல் வேண்டும்.

*2.6* அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை *18/2020* இற்கமைய உரிய அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெறல் வேண்டும்.

## 3. சம்பள அளவுத்திட்டம்

3ம் வகுப்பு - I(அ) தர ஆசிரியர் பதவிக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஆசிரியர் ஒருவர் நியமனம் செயல்வலுப்பெறும் திகதியிலிருந்து 10/2025 ஆம் இலக்க, 2025.03.25ம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக, **GE 1 - 2025** சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் **ரூபா 53,060 - 800 x 6 - 940 x 7 - 1,080 x 2 - 66,600** மாதாந்த சம்பள அளவின், *14* ஆவது சம்பளப் படிநிலையான ரூபா **64,440/-** இல் அமர்த்தப்படுவதோடு, அச்சுற்றறிக்கையின் **"அட்டவணை - III"** க்கு அமைய சம்பளம் வழங்கப்படும். மேலும் அரசினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளையும் பெற உரித்துடையவராவர்.

## 4. பொதுத் தகைமைகள்

4.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரி அல்லது அவரது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு :- நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.**

4.3 எனினும், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரையின் அடிப்படையில், சிங்களமொழி மூலமான வெற்றிடங்களை நிரப்புவதற்காக, **மேலே பிரிவு 4.2 இல்** குறிப்பிடப்பட்ட வகையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் **ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத பட்சத்தில் மட்டும்,** தெரிவுக்காக பரிசீலிக்கப்படுவர் என்ற நிபந்தனையின் கீழ் சிங்கள மொழி மூலமான வெற்றிடங்களுக்கு, வடக்கு மாகாண எல்லையுடன் இணைந்த பின்வரும் மாகாணங்களில், இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் தொடர்ச்சியாக வசித்திருந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

- கிழக்கு மாகாணம்.
- வடமத்திய மாகாணம்.
- வடமேல் மாகாணம்.

**குறிப்பு :- நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.**

4.4 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

4.5

4.5.1.1 விண்ணப்பதாரி ஒருவர் ஆட்சேர்ப்பு விளம்பரத்தின் பொருட்டு **ஒரு விண்ணப்பத்தினை மட்டுமே** சமர்ப்பிக்க முடியும்.

4.5.1.2 விண்ணப்பதாரி ஒருவர் உச்சமாக **இரண்டு பாடங்களுக்கு மாத்திரம் (ஒரு மொழிமூலம்)** விண்ணப்பிக்க இயலுவதோடு விண்ணப்பிக்கும் பாடத்தெரிவினை பின்னர் மாற்றம் மேற்கொள்ள முடியாது.

4.5.1.3 விண்ணப்பதாரி, எம் மொழிமூல வெற்றிடப் பாடங்களுக்கு விண்ணப்பிக்கின்றாரோ, **அம் மொழிமூலமே பரீட்சைக்கு தோற்ற முடியும்.**

4.5.1.4 விருப்பத்தெரிவின் முன்னுரிமை அடிப்படையிலேயே பாடங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

4.5.1.5 பிரயோகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள், விண்ணப்பப் படிவத்தில் தாம் ஏற்கனவே குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு மொழி மூலத்திலேயே தோற்றுதல் வேண்டும்.

4.5.1.6 எம்மால் கோரப்பட்ட ஆசிரிய பதவி வெற்றிடங்களுக்கான தகைமையுடைய பட்டத்தின் பாட அலகுகள் தொடர்பாக சந்தேகம் எழுமிடத்து, நியமன அதிகாரி / மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

4.6 விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.7 வயதெல்லை:- விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரியின் வயது **18 வருடங்களுக்குக் குறையாதவராகவும், 35 வருடங்களுக்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## 5. கல்வித் தகைமைகள்

5.1 ***1885/38***ம் இலக்க ***2014.10.23***ம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பிற்கமைய ***2025.07.18ம்*** திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நிரல் அமைச்சினால் ஆசிரியர் நியமனங்களுக்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட விசேடமான பாடத்துறைகளுக்குரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட பல்கலைக்கழக பட்டத் தகைமைச் சான்றிதழைப் **(இணைப்பு - 02 இல் குறிப்பிட்டுள்ளவாறு)** பெற்றிருத்தல் வேண்டும். பட்டப் பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களும், கோரப்பட்ட கல்வித் தகைமையைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.2 மேற்குறிப்பிட்ட தகைமைகளுடன் மேலதிகமாக க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ்மொழி அல்லது சிங்களமொழி சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

## 6. ஆட்சேர்ப்பு முறை

6.1 போட்டிப்பரீட்சையில் ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் குறைந்தது 40% புள்ளிகளை பெற்று தகைமைபெறும் பரீட்சார்த்திகளிலிருந்து மொத்தப் புள்ளிகளின் உயர் புள்ளி ஒழுங்கில் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்ற **ஐந்து (05) மடங்கு** விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சையில் குறித்த பதவிக்காக கோரப்பட்ட தகைமைகள் பரிசீலிக்கப்படும். எனினும் நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. இந் நேர்முகப்பரீட்சையில், தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளில், வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்ற **மூன்று (03) மடங்கு** விண்ணப்பதாரிகள் பிரயோகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். **பிரிவு 12.2ல் குறிப்பிடப்பட்டவாறு** பிரயோகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படும். பிரயோகப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை ஆகிய இரண்டிலும் பெற்ற மொத்தப்புள்ளிகளின் கூட்டுத்தொகையின் உயர்புள்ளி வரிசை ஒழுங்கில் (Merit Order) நிலவும் வெற்றிடங்களிற்கேற்ப நியமனம் வழங்கப்படும்.

6.2 மேலே 6.1 இல் குறிப்பிட்ட வகையில் ஆட்சேர்ப்புக்கு தெரிவு செய்யப்படுபவர்களுள் விசேட தேவையுடையோருக்கான (மாற்றுத்திறனாளிகள்) ஒதுக்கீடு, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 27/88 இற்கமைய கவனத்திற் கொள்ளப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது உடல், உள நிலைமைகள் தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

## 7. பரீட்சைக் கட்டணம்

7.1 பிரிவு 4.2 இல் குறிப்பிட்ட வகையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள், பரீட்சைக் கட்டணம் **ரூபா 500.00 ஐ** "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்" என்ற பெயருக்குக் கிடைக்கக்கூடியவாறாக **வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் செலுத்தி**, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

7.2 எனினும், **பிரிவு 4.3 இல் குறிப்பிட்ட வகையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மட்டும்** பரீட்சைக் கட்டணம் **ரூபா 500.00 ஐ** எந்தவொரு தபால் அலுவலகமொன்றிலும் காசுக்கட்டளையாக (Money Order) **<u>"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"</u>** என்ற பெயருக்கு **<u>யாழ்ப்பாணம் பிரதான தபால் அலுவலகத்தில்</u>** மாற்றக் கூடியவாறு செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 8. விண்ணப்பிக்கும் முறை

8.1 இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை தமது சொந்தக் கையெழுத்தின் மூலம் பூரணப்படுத்தல் வேண்டும், பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **2025.07.18**.ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

8.2 விண்ணப்பப்படிவத்தில் 01 இன் கீழ் விண்ணப்பதாரியின் பெயரைக் குறிப்பிடும் போது, தமது பெயரையே (வழங்கப்பட்ட பெயர்) குறிப்பிடுவதுடன், தமது பெயருக்குரிய அனைத்து முதலெழுத்துக்களையும் பெயரின் பின்னால் வரும் வண்ணம் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பப்படிவத்தில் 02 இன் கீழ் விண்ணப்பதாரியின் முழுப்பெயரைக் குறிப்பிடும் போது விண்ணப்பதாரியின் பெயரின் கீழ்க் கோடிடல் வேண்டும்.

**<u>உதாரணம்</u>**:- விண்ணப்பப்படிவத்தின் 01 இல் முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் : ANJALI . K எனக் குறிப்பிடப்படல் வேண்டும். (விண்ணப்பதாரியின் பெயர் - ANJALI)

விண்ணப்பப்படிவத்தின் 02 இல் விண்ணப்பதாரியின் முழுப்பெயர் : <u>ANJALI</u> KUGAN எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.3 விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"NP/07/10/01/181"** என குறிப்பிடப்படல் வேண்டும்.

8.4 விண்ணப்பப்படிவத்தின் **நிழற்படப்பிரதியை** தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். எனினும், விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். எவ்வாறாயினும், **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக்கருதப்படலாகாது.**

8.5 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்படமாட்டாது. எனினும், விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன், நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பில் உரிய விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

8.6 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 05 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி, பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய கோரிக்கைக் கடிதம் மூலம்

**"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல: **021 221 9939** / தொலைநகல் இல: **021 221 9940** / மின்னஞ்சல்: **examppscnp@gmail.com**)

- பரீட்சையின் பெயர்.
- விண்ணப்பதாரியின் முழுப்பெயர்.
- தேசிய அடையாள அட்டை இலக்கம்.
- விண்ணப்பதாரியின் அஞ்சல் முகவரி.
- விண்ணப்பதாரியின் மின்னஞ்சல் முகவரி.
- விண்ணப்பப் படிவத்தின் பிரதி.
- விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம், மற்றும் திகதி.
- பரீட்சைக்கட்டணம் செலுத்தியதற்கான சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

## 9. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.** ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத்தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்திய பிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா 854,880.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர மத்திய அல்லது மாகாண அரசாங்க உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் பதவிமுத்திரையுடன் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

## 10. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்

10.1 பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் இலங்கை கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை பரீட்சைக்கு தோற்றும்போது சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை **"செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"** அவர்களின் தற்றுணிவின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

10.2 மேலும், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியவாறு முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் கருவிகளை அணியவில்லையென்பதை உறுதிப்படுத்துவதற்காக இருகாதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். மேலும் அவ்வாறு உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சைமண்டபத்தினுள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரையில் விண்ணப்பதாரியை அடையாளம் காணக்கூடிய விதத்தில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

## 11 பொய்யான தகவல்களுக்கான தண்டனை

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென நியமனத்தின் பின் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 12 பரீட்சைத் திட்டம்

### 12.1 எழுத்துப் பரீட்சை

இப் பரீட்சை கீழ்வருமாறு இரண்டு (02) வினாப் பத்திரங்களைக் கொண்டிருக்கும். இது தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் நடாத்தப்படும். தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் தமிழ் மொழிமூலமும், சிங்கள மொழிமூல ஆசிரியர் வெற்றிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் சிங்கள மொழிமூலமும், ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் ஆங்கில மொழிமூலமும் பரீட்சை எழுதுதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் பரீட்சை மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்யமுடியாது.

| இல | வினாப் பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 01. | நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்திகளிடம் ஆசிரியர் தொழிலுக்காக காணப்படும் திறமைகள் தர்க்க ரீதியிலான அறிவு தொடர்பில் மதிப்பீடு செய்யும் நோக்குடன் இவ் வினாத்தாள் தயாரிக்கப்படுகிறது. இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். | 01 மணித்தியாலம் | 100 |
| 02. | பொது அறிவு | பரீட்சார்த்திகளிடம் ஆசிரியர் துறைக்குரிய, அத்துறை தொடர்பாக காணப்படும் பொது அறிவு, உள்நாட்டு ரீதியில் ஏற்பட்டுள்ள மற்றும் ஏற்படக்கூடிய கல்வி முன்னேற்றங்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொது அறிவினைப் பரிசீலனை செய்யக்கூடிய பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாத்தாள்களாகும். சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். | 01 மணித்தியாலம் | 100 |

குறிப்பு :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதனால் நேர்முகப்பரீட்சைக்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் **நாற்பது வீதத்தை (40%)** பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### 12.2 பிரயோகப் பரீட்சை

நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | பிரயோகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் ஒப்பளவுகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01. | நோக்கம் மற்றும் பிரவேசம் **(Objective and the Approach)** | 05 | 02 |
| 02. | ஆளுமை மற்றும் ஒலிக்கட்டுப்பாடு **(Personality and Voice Control)** | 05 | 02 |
| 03. | தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் **(Clarity in the Communication)** | 05 | 02 |
| 04. | நேர முகாமைத்துவம் **(Time Management)** | 05 | 02 |
| 05. | சமர்பிப்புத் திறமைகள் **(Usage of Techniques of Presentation)** | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **25** | **10** |

***13 பரீட்சை நிலையம் :-***

*13.1* பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு,

| ***நகரம்*** | ***நகர எண்*** |
|---|---|
| யாழ்ப்பாணம் | *01* |
| மன்னார் | *02* |
| வவுனியா | *03* |
| கிளிநொச்சி | *04* |
| முல்லைத்தீவு | *05* |

13.2 எவ்வாறாயினும், கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு விண்ணப்பதாரியால் தெரிவு செய்யப்படும் பரீட்சை நகரத்தை மாற்றியமைப்பது தொடர்பான தீர்மானம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

***14 பரீட்சைப் பெறுபேறுகள் :-***

பரீட்சார்த்திகளுக்கான முழுமைப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாண சபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும் என்பதோடு, தமது தனிப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழையும் www.np.gov.lk ⟶ **Exams & Recruitments** ⟶ **Results** எனும் தொடர்பின் ஊடாக பார்வையிட்டு தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**கவனிக்கவும்:-**

(i) இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் தொடர்பாகவும், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் வேண்டுமென எதிர்பார்க்குமிடத்து, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவின் *021 221 9939* என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(iv) இவ் அறிவித்தலில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

(v) இப் பரீட்சை தொடர்பான அறிவித்தலினை www.np.gov.lk என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

***பொ.குகநாதன்,***
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
*2025.06.19*